20th January 1961]

SRI K. B. S. MANI: புதிய ஆரம்பக் கல்வி திட்டத்தைக் கொண்டுவர எல்லா கிராமங்களிலும் சிறு குழந்தைகள் நர்சரி ஸ்கூல் ஆரம்பிக்க சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: திட்டம் ஆரம்பக் கல்வியைப்பற்றியது. நர்சரி ஸ்கூல் ஆரம்பிக்க வழி செய்யப்படவில்லை.

SRI T. S. RAMASWAMI: நம்முடைய ராஜ்யத்தில் மூன்றில் ஒரு பகுதியில் இந்தத் திட்டம் நடைமுறையில் அமுலுக்கு வருவதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் எந்தெந்த ஜில்லாக்களில் அமுலுக்கு வரும் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சட்டசபை நடவடிக்கைகளைப் பார்த்தால் இதுபற்றிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போது விவரங்கள் கொடுக்கப்பட்டிருப்பது தெரியும்.

SRI A. A. RASHEED: What is the percentage of expenditure that will be borne by the Central Government under this scheme?

THE HON. SRI C. SUBRAMANIAM: A separate question may be put.

Use of Tamil in Courts

* 22 *Q.*—SRI K. R. NALLASIVAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போது நீதி மன்றங்களில் தமிழ் எந்த அளவில் உபயோகிக்கப்படுகிறது?

(இ) தமிழை மேலும் அதிக அளவில் பயன்படுத்த சர்க்கார் இட்டிருக்கும் திட்டம் யாது?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Tamil is being freely used even now in Courts in the mufassal in advancing arguments and in cross-examination of witnesses. Documents in Tamil also can be filed as exhibits.

(இ) There is no such proposal, Sir.

SRI V. SANKARAN: நீதி மன்றங்களில் தமிழிலேயே பேச வேண்டுமென்று ஏற்படுத்திவிட்டால் வக்கீல்களுக்குள்ள மதிப்பும் கிராக்கியும் பெறும் அளவிற்கு பாதிக்கும் என்பதை உணர்ந்து சர்க்கார் அந்த ஏற்பாட்டை நிறுத்திக் கொள்வார்களா?

(பதில் இல்லை.)

Sugar

* 23 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Union Government have consulted the State Government regarding the export of sugar; and